**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55 of 2022**

Prosecution witness LW15 (PW9) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 25.11.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. மைதிலி | Husband's Name | : | திரு. காமராஜ் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்போது கே .ஆர்.பி டேம் (Dam) காவல் நிலையத்தில் முதல் நிலைய காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கந்திகுப்பம் காவல் நிலையத்தில் முதல் நிலைய காவலராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 28.10.2021 ம் தேதி கந்திகுப்பம் காவல் நிலைய குற்ற எண். 325/2021 பிரிவு 174 கு.வி.மு.ச Alerted to 302 இ.த.ச கொலையுண்டு இறந்து போன ரசித்து த.பெ தீல் பாஷா , மிட்டல்பள்ளி கிராம் பாலிநாயனப்பள்ளி அஞ்சல் , பர்கூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவர் பிரேதத்தின் மீது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவகிடங்கு முன்பு பர்கூர் வட்ட ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் ஆஜரில் இருந்தேன். இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை வேண்டுகோள் கடிதத்துடன் உதவி பேராசிரியர் சட்டம் சார்ந்த அறிவியல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அவர்களிடம் ஒப்படைத்தேன் . அந்த வேண்டுகோள் கடிதத்துடன் ரசீத்தின் உடலை ஒப்படைத்தேன் . ரசீத்தின் பிரேதத்தை பேராசிரியரிடம் அடையாம் காட்டினேன் . பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை குல வழக்கப்படி அடக்கம் செய்ய பிரேதத்தை உறவினர் வசம் ஒப்படைத்தேன்.

பிரேதத்தின் மீது இருந்த சிமெண்ட் கலர் டி –சர்ட், கழுத்திலும் , கையிலும் பாடர் வைத்தது. புளு கலர் லுங்கி கருப்பு மற்றும் வெள்ளை கட்டம்

போட்டது, பிரெளன் கலர் ஜெட்டி . 28.10.2021 தேதி இரவு 8.30 மணிக்கு கந்திகுப்பம் காவல் நிலையத்தில் ஆஜராகி காவல் ஆய்வாளரிடம் தனி அறிக்கையுடன் அந்த உடைகளை ஒப்படைத்தேன் . அந்த தனி அறிக்கை தற்போது நீதிமனற்த்தில் காண்பிக்கப்படுவதுதான் . அந்த தனி அறிக்கை **EX.P.8** ஆகும் அந்த தனி அறிக்கையின்பேரில் ஆய்வாளர் அந்த பொருட்களை படிவம் 91 ல் கைப்பற்றினார் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் அந்த படிவம் 91 **EX.P.9** ஆகும். சிமெண்ட் கலர் டி –சர்ட் கழுத்திலும் , கையிலும் பாடர் வைத்தது **MO2**, புளூ கலர் லுங்கி கருப்பு மற்றும் வெள்ளை கட்டம் போட்டது **MO3**, பிரெளன் கலர் ஜெட்டி **MO4** ஆகும். நான் ஒப்படைத்த அந்த டி–சர்ட் ஆனது கிழிந்த நிலையில் காணப்பட்டது.

30.11.2021 தேதி பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கபட்ட உடல் உள்ளூப்புகள் மற்றும் கிணற்று தண்ணீர் ஆகியவற்றை வட்டார தடய அறிவியல் ஆய்வகம் தருமபுரியில் ஒப்படைத்து நிலையம் ஆஜரானேன் . அவ்வாறு ஒப்படைக்கும் போது என்னிடம் ஒப்புகை சீட்டுகளை கொடுத்தார்கள். அந்த ஒப்புகை சீட்டுகள் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான். அந்த ஒப்புகை சீட்டுகள் இரண்டும் **EX.P.10** and **EX.P.11** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொன்ன தேதியில் , சொன்ன நேரத்தில் வேண்டுகோள் கடிதத்துடன் அரசு மருத்துவமனை கிருஷ்ணகிரியில் ஏதும் ஆஜராகவில்லை என்றும் அவ்வாறு ஆஜரானதாகவும் பிரேதத்தை அடையாளம் காட்டியதாகவும் , பிரேத பரிசோதனைக்கு பிறகு உடைகளை தனி அறிக்கையுடன் ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாக சொல்லும் விவரங்கள் பொய்யானவை என்று சொன்னால் அது சரியல்ல . நான் சொல்லுவது போல் ஆய்வாளர் என்னை ஏதும் விசாரிக்கவில்லை என்று சொன்னால் அது தவறு.

**S/d..Thiru.V.Damodaran,**

**Additional District Judge,**
**Krishnagiri.**